**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜூலை மாதம் 29—ம் தேதி வாதி தரப்பு சாட்சி வா.சா.1—ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது. (வாதி ஆஜர் . பிரதிவாதி ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)

அ.வ.எண்.1164/2023

வா.சா.1 கிருஷ்ணதனராஜ்

**மனுவின்பேரில் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை:—**

1. என்னுடைய அலைபேசி எண்.9842750790 ஆகும் மற்றொரு என்னுடைய அலைபேசி எண்.9080958813 ஆகும். பிரதிவாதியின் அலைபேசி எண்.9842024367 ஆகும். மேற்கண்ட என்னுடைய இரு அலைபேசி எண்களிலிருந்து பிரதிவாதியை நான் அழைத்துப்பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல. நேரிலும் பேசியுள்ளார், அலைபேசியிலும் என்னிடம் பேசியுள்ளார்.

2. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு, வழக்குரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை. மேற்படி சங்கதியை மறைத்து பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

3. என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பு, வழக்குரை மற்றும் பிரமாணவாக்குமூலத்தில் பிரதிவாதி எவ்வளவு தொகை கேட்டார் என்று குறிப்பிட்டு கூறவில்லை என்றால் சரிதான்.

4. பிரதிவாதி ஜீவப்பிரியா கடன் கேட்டபோது வட்டியை பற்றி பேசினேனா அல்லது கடன் கொடுக்கும்போது வட்டியை பற்றி பேசினேனா என்றால் கடன் கேட்கும்போதே வட்டியை பற்றி சொன்னேன்.

5. ஜீவப்பிரியா கொடுத்த காசோலை வட்டிக்கும் சேர்த்து கொடுத்தாரா என்றால் சரியல்ல.

6. உண்மையிலேயே கடன் வாங்கியிருந்தால் வட்டியுடன் சேர்த்து காசோலையை வாங்கியிருப்பேன் என்று சொன்னால் சரியல்ல.

7. இந்த பிரதிவாதி எந்தவொரு கடனும் வாங்கவில்லை அதற்காக காசோலையும் கொடுக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. உண்மையிலேயே நான் கடன் கொடுத்திருந்தால் ரூ.20,000/—க்கு மேல் வங்கி பணப்பரிவர்த்தனை மூலமாக தான் கொடுத்திருக்கவேண்டும் என்று சொன்னால் சரியல்ல. வருமானவரி கட்டி வருகிறீர்களா என்றால் இல்லை. விவசாயம் மட்டும் செய்து வருகிறேன்.

9. விவசாயம் செய்து வருகிறேன் என்பது பொய் என்றாலும், சட்டத்திற்கு புறம்பாக கொடுக்கல் வாங்கல் மற்றும் வட்டிக்கு பணம் கொடுத்து, வாங்கி தொழில் செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.

10. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல. மேலும் இந்த வழக்கு பிரதிவாதி மீது மோசடியாக போடப்பட்ட வழக்கு என்று சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.